# யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா - 2011

*தலைவர் :*
திரு.தி.சிவநாதன் வித்தியாலய முதல்வர்

*பிரதம விருந்தினர்*
திரு. சில்வேஸ்ரி அலென்ரின் (SA உதயன்)
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்

*சிறப்பு விருந்தினர்*
திரு.சிதரம்பரப்பிள்ளை மாணிக்கராசா
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் நல்லூர்)

*கௌரவ விருந்தினர்கள்*
திரு. நா. இரட்ணசிங்கம் (ஆசிரிய வள நிலைய முகாமையாளர்)
திரு.திருமதி சுஜீந்திரன் (லண்டன்)
திரு. திருமதி பாலரஞ்சன் (லண்டன்)

17.11.2012

## நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. வரவேற்பு நடனம்
4. வரவேற்புரை
5. ஆசியுரை
6. அதிபர் அறிக்கை
7. கௌரவ விருந்தினர் உரை
8. சிறப்பு விருந்தினர் உரை
9. பிரதம விருந்தினர் உரை
10. பரிசில் வழங்குதல்
11. நன்றியுரை
12. கலை நிகழ்ச்சிகள்
    - தனி நடனம்
    - குழு நடனம்
13. பாடசாலைக் கீதம்

## யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

### மகுட வாசகம்

கல்வியே கருந்தனம்

### *Motto*

*Education is supreme wealth*

### தூர நோக்கு

மாறுகின்ற உலகின் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறும் பண்புசார் தன்மை கொண்ட சமூகத்திற்கேற்ற ஒழுக்கமுள்ள பயன்படுநற்பிரசைகளை உருவாக்கல்.

### *Vision*

*In the production of Good Citizen's to the adhesive globe to stand the challenges in case of successive multi characteristics society.*

### பணிக்கூற்று

மகிழ்ச்சியான கற்றலுக்குரிய கவின் நிலையை ஏற்படுத்தி அதி உச்சப் பயன்பாட்டு வினைத்திறனுடன் வளங்களைக் கையாண்டு மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகளினூடாக உச்சப் பெறுபேறுகளைப் பெற்று சமூக விழுமியங்களுக்கேற்ப ஆரோக்கியமாக வாழ வழிசமைத்துக் கொடுத்தல்.

### *Mission*

*To put forward a way to the pupils for healthy and social values in case of optimum use of resources effectively through the achievement of competencies in creating happy learning environment.*

# அதிபர் அறிக்கை

கொக்குவில் பதிதனிலே கொலுவீற்றிருந்து எம் மாணவச் செல்வங்களுக்கு கல்விச் செல்வத்தையும் நல்லொழுக்கப் பண்புகளையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் அன்னையாம் நாமகளின் பாதக் கமலங்களைப் பணிந்து எனதுரையை ஆரம்பிக்கின்றேன்.

2011ம் ஆண்டிற்கான பரிசுத்தின நன்னாளாகிய இந்நாளில் எம் விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர். திரு சில்வேஸ்ரி அலென்ரீன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் கோட்டக் கல்வி அலுவலர் திரு.சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா அவர்களே, கௌரவ விருந்தினர்களகாக வருகை தந்திருக்கும் ஆசிரிய வளமுகாமயாளர் திரு.நா.இரட்ணசிங்கம் மற்றும் இலண்டன் வாழ் திரு. திருமதி. சுஜீந்திரன், திரு. திருமதி பாலரஞ்சன் தம்பதிகளே மேலும் அன்புசால் அயல் பாடசாலை அதிபர்களே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, தகைசார் ஆசிரியர்களே, நலன் விரும்பிம்பிகளே, அன்பும் பண்பும் நிறைந்த மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய விழாவின் பிரம விருந்தினர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரான திருவாளர் சில்வேஸ்ரி அலென்ரீன் அவர்கள் ஆரம்ப காலத்தில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் அமைப்பாளராக நெல்லியடியில் தெரிவு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து அச்சுவேலி, சுன்னாகம், கோண்டாவில், நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் அமைப்பாளராக இருந்து 1992 இல் யாழ் மாவட்ட அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 2000 – 2003 வரை கரவெட்டி தெற்கு, மேற்கு, பிரதேச சபை உபதலைவராக கடமையாற்றியுள்ளார். 2004 இல் காரை நகருக்கும் திருகோணமலைக்கும் இடையிலான வடகடல் கப்பல் சேவை நடைபெற்ற போது அதற்கு பொறுப்பாளராக இருந்தார். 2007 இல் சமூக சேவை அமைச்சின் அமைப்பாளராக இருந்த வேளை

வீட்டுத் திட்டங்களுக்கு தலா 50,000 ரூபாவையும் விதவைகளுக்கு 10,000 ரூபாவையும் உதவித் தொகையாக வழங்கினார். 2010ம் ஆண்டு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து நல்லூர், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயற்பட்டு வருகின்ற பெருந்தகையாளரே உங்கள் வருகை எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்வைத் தரும் வேளை தங்கள் பணி என்னும் செழித்தோங்க வாழ்த்தி நிற்கின்றோம்.

பெருமதிப்பிற்குரிய கோட்டக் கல்வி அதிகாரி திருவாளர் சி.மாணிக்கராசா அவர்களே, வடமாகாண கோட்டக்கல்வி அதிகாரிகளுள் சிறப்பு மிக்கவராக கௌரவிக்கப்பட்ட தாங்கள் எமது விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருப்பது எங்கள் அனைவருக்கும் பெருமகிழ்வைத் தருகின்றது.

எம் விழாவுக்கான கௌரவ விருந்தினர்களின் ஒருவரான ஆசிரிய வள முகாமையாளர் திரு.நா. இரட்ணசிங்கம் அவர்கள் 1990,1991 ஆகிய காலப்பகுதிகளில் யாழ்/ பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்கும் வேளைகளில் ஆசிரிய ஒன்றியத்தின் தலைவராக இருந்து செயற்பட்டார். அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்களிலும் சிறப்புற பணிபுரிந்தார். எல்லோருடனும் இன்முகத்துடன் பழகிக் கொள்ளும் இயல்புடைய இவர் கலைத்துறையில் சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவரது சேவைகளைப் பெற்ற நாம் இவரை என்றும் நன்றியுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

அடுத்த எம் கௌரவ விருந்தினர்களான திரு. திருமதி சுஜீந்திரன் தம்பதியினர் அவர்கள் எமது மாணவர்களுடன் நெருங்கிய உறவினைப் பேணி ஆண்டுதோறும் இலங்கைக்கு வருகை தந்து மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் சீருடைகள், பாதணிகள்

போன்றவற்றை வழங்கி கற்றலை மேம்படுத்துவதற்காக அயலில் சிறிய நூலகம் ஒன்றை அமைத்து மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தனர். மேலும் அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள இடிந்த கட்டத்தை அகற்றியதும் அவ்விடத்தில் புதிய மாடிக்கட்டம் ஒன்றினை அமைத்துக் தருவதாகவும் உறுதியளித்துள்ளார். எவ்வேளையிலும் எமது பாடசாலை நலனில் அக்கறையாக செயற்பட்டு வருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றோம். தொடர்ந்து தங்களது சேவை எம்மாணவர்களுக்கு “வரண்ட நிலத்து வான் மழையாக” அமைய வேண்டுமென ஆசித்து நிற்கின்றோம்.

கௌரவ விருந்தினர் வரிசையில் தொடர்ந்து வரும் திரு. திருமதி பாலறஞ்சன் தம்பதியினரே! தாங்கள் கல்வி கற்ற பாடசாலையென்றை பாசப்பற்றுதலுடன் வருடாந்தோறும் எமது பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களுடன் அன்பு ததும்ப உரையாடி இனிப்புப் பண்டங்கள் முதலாகப் பகிர்ந்தளிப்பது மல்லாமல் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை இலங்கைக்கு வரும்போது வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் கொள்வனவு செய்து இவ் விழாவுக்கான பரிசில்களை மனமுவந்து எம்மாணவர்களுக்கு வழங்கும் தங்களை இவ்வினிய விழாவில் கௌரவ விருந்தினராக வரவேற்பதில் எமது பாடசாலை சமூகம் மிகுந்த மகிழ்வடைகின்றது.

எமது வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு ஞாபகார்த்த நிதியுதவியினை கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கிவரும் வெளிநாட்டில் வதியும் பழைய மாணவியான திருமதி இரட்ணசிங்கம் புவனேஸ்வரி அவர்களுக்கும் இந்நேரத்தில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது மாணவரது கல்வியிலும் ஒழுக்கத்திலும் உடலுள் நலத்திலும் மிகுந்த அக்கறை காட்டி சகல வழிகளிலும் பணிபுரியும் நிறுவனங்களான சின்மயா மிஸன், யாழ்விஷன், சத்ய சாயி சேவா நிலையம் கியூமெடிக்கா ஆகிய நிறுவனங்களுக்கும் அதில்

பணிபுரிவோர்க்கும் எமக்கும் வாரி வழங்கும் அன்புப் பணிகளுக்கும் கரம் கூப்பி நன்றிகள் பல பகர்கின்றோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக எமது பாடசாலையை சிறந்த முறையில் நிர்வகித்து வந்த எமது முன்னாள் அதிபர் திரு.க.தவகீஸ்வரன் அவர்களையும் எமது மகிழ்வில் இணைத்துக் கொள்கின்றோம்.

நிறைவாக அழியாப்புகழ் பெற்ற அமரர் திருமதி சரோஜினி தேவி ஆறுமுகராசா அவர்கள் எம் மாணவர் நலனில் அக்கறை காட்டி ஆற்றிய அளப்பெரும் சேவைகளுக்கு எங்களது மானசீகமான நன்றிகள தெரிவித்து நிற்கின்றோம்.

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு ஆலோசனைகளை வழங்கி பல வகையிலும் எம்மை வளப்படுத்தி வரும் வலயக் கல்வி திணைக்களத்திற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரதும் பணியை நினைவுகூர்ந்து பாராட்டுகின்றோம்.

எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தாராள மனம்படைத்த பெருந்தகைகளின் உதவிகளைப் பெற்று செயற்படுத்தி வருகின்றோம். இப்பரிசளிப்பு விழாவினையும் கூட அத்தகைய அன்பர்களின் உதவியினாலேயே செய்ய காலம் கைகூடியிருப்பது மன மகிழ்வைத் தருகின்றது.

## பாடசாலை கல்விசார் ஆளணியியர்

எமது வித்தியாலயத்தின் ஆசிரிய ஆளணியரினரின் (2012) எண்ணிக்கை 19 ஆகும். பகுதிநேர ஆசிரியர் ஒருவர் உள்ளிட மொத்தம் 20 பேர் ஆகும்.

## மாணவர் விபரம்

### வித்தியாலய மாணவர்களின் பரம்பல்

தரம் 1 தொடக்கம் 5 வரை கல்விகற்கும் மாணவர்கள் 54 பேரும் தரம் 6 தொடக்கம் 11 வரை கல்விகற்கும் மாணவர்கள் 79 பேரும் ஆகவே மொத்தம் 133 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

| *க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறு 2009 - 2011* | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருடம் | 2009 | | 2010 | | 2011 | |
| | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
| சைவசமயம் | 10 | 100 | 10 | 100 | 8 | 100 |
| தமிழ் | 10 | 100 | 10 | 100 | 8 | 88 |
| விஞ்ஞானம் | 10 | 50 | 10 | 70 | 8 | 87.5 |
| கணிதம் | 10 | 60 | 10 | 60 | 8 | 63 |
| ஆங்கிலம் | 10 | 0 | 10 | 0 | 8 | 0 |
| சங்கீதம் | 10 | 90 | 10 | 66 | 7 | 55 |
| சித்திரம் | - | -- | - | - | 1 | 100 |
| வரலாறு | 10 | 80 | 10 | 70 | 8 | 75 |
| புவியியல் | 10 | 80 | 10 | 80 | 8 | 88 |
| விவசாயம் | 7 | 56.6 | 4 | 75 | 3 | 100 |
| மனைப்பொருளியல் | 3 | 100 | 6 | 83 | 5 | 80 |

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2011**

தலைவர் : திரு.க.தவகீஸ்வரன்

செயலாளர் : திருமதி.பு.மஞ்சுளா

பொருளாளர் : செல்வி .இ.ஜெயராணி

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2012**

தலைவர் : திரு.தி.சிவநாதன்

செயலாளர் : திருமதி.பு.மஞ்சுளா

பொருளாளர் : செல்வி .இ.ஜெயராணி

**பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்**

திருமதிச.சுதாமணி

திருமதிபி.சந்திராதேவி

திரு.ஆ.ரவீந்திரராசா

இவர்கள் எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளிலும் பொது கூட்டங்களிலும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

**பழையமாணவர் சங்கம் 2012**

தலைவர் : திரு.தி.சிவநாதன்

செயலாளர் : செல்வன் பி.வனோஜன்

பொருளாளர் : செல்வன் செ.றஜித்

**உறுப்பினர்கள்**

செல்வி இ.வரதா

செல்வி ஆ.லக்ஷாயினி

செல்வி பி.தாட்சாயினி

இவர்கள் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பங்களிப்பைநல்கிவருகின்றனர்.

### பாடசாலை அபிவிருத்திக் குழு 2012(SDC)

தலைவர் : திரு.தி.சிவநாதன்

பொருளாளர் : திருமதிந.நட்பினி

உபதலைவர் : திருமதிவ.நகுலநாதன்

செயலாளர் : திருமதியோ.திலகேஸ்வரி

### ஆசிரியர் நலன்புரிச்சங்கம் 2011

தலைவர் : திருமதிவ.நகுலநாதன்

செயலாளர் : திருமதி.ம.தயாநிதி

பொருளாளர் : திருமதிகு.தர்மகுலராணி

ஆசிரியர்களின் நலன் பேணும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

### பாடசாலை மாணவ முதல்வர்கள் - 2011

1. அ.சங்கீர்
2. த.தனுஸ்ரன்
3. ஜெ.தர்சன்
4. ப.பகீர்த்தனா
5. அ.டிபிள்சன்
6. மு.ஜனனி
7. வி.வித்தியா

## இணைபாட விதானச் செயற்பாடுகள்

எமது பாடசாலையின் இணைபாட விதானச் செயற்பாடுகளான மெய்வல்லுனர் போட்டி, தமிழ், ஆங்கில, கணித, விஞ்ஞான, சமய, சமூக, அழகியல், ஆக்கத்திறன், ஆரம்பக்கல்வி, விசேட தேவையுடையோர் போன்றபோட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றிச்சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

## மாணவர் மன்றங்கள்

எமது வித்தியாலயத்தில் பல்வேறு மன்றங்கள் இயங்கி வருகின்றன. மன்றங்களின் செயற்பாடானது மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் வகையில் இயங்குகின்றது

### *1. இந்துமாமன்றம்*

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திருமதி ல.நாகையா |
| தலைவர் | : | செல்வன் அ.ஆதித்தன் |
| செயலாளர் | : | செல்வி ர.மதுஷா |
| பொருளாளர் | : | செல்வி ஆ.லக்ஷாயினி |

இறையன்பையும் விழுமியப் பண்புகளையும் வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது வாரம் தோறும் வெள்ளிக்கிழமை பூசையும், வருடந்தோறும் பொங்கல் விழா, நாயன்மாரின் குருபூசைத் தினமும், நவராத்திரி விழா என்பவற்றை சிறப்பாக நடாத்தி வருகின்றது. அத்துடன் சைவபரிபாலன நடாத்தும் பாடசாலைமட்ட, கோட்ட, வலய மட்ட சமய அறிவுப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்களும் பெறுவது குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

## *2. தமிழ் மன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதிப.மரியகுணசீலி
தலைவர் : செல்வி ர.மதுஷா
செயலாளர் : பி.தனுஷா
பொருளாளர் : செல்வன் ஆ.டிபிள்சன்

எமது மன்றம் ஒவ்வொரு தவணையும் இருதடவைகள் மன்றத்தை நடாத்தி வருவதுடன் மாணவர்கள் மத்தியில் முத்தமிழையும் வளர்க்கும் ஒரு முன்மாதிரியான மன்றமாகச் செயற்படுகின்றது.

## *3. கணித விஞ்ஞான மன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதி வ.நகுலநாதன்
தலைவர் : செல்வன் ஜெ.தர்சன்
செயலாளர் : செல்வி.மு.ஜனனி
பொருளாளர் : செல்வன் ஆ.ரதுர்ஜன்

இம் மன்றம் மாணவர்களது அறிவியல் சார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதற்கு அயராது பாடுபட்டு வருகின்றது.

## *4. சமூக விஞ்ஞான மன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதி ம.முரளிகரன்
தலைவர் : செல்வன் அ.சங்கீர்
செயலாளர் : செல்வன் அ.டிபிள்சன்
பொருளாளர் : செல்வன் த.தனுஸ்ரன்

இம் மன்றமானது வாரந்தோறும் பொது அறிவுப்போட்டிகளை நடாத்துவதுடன் கோட்ட,வலய மட்டபோட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்குரிய பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

*5. சுகாதார மன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதி பி.சபாநாதன்

தலைவர் : செல்வன் அ.டிபிள்சன்

செயலாளர் : செல்வன் அ.சங்கீர்

பொருளாளர் : செல்வி ர.தாரகா

மாணவர்களின் உடல்,உள,நல ஆரோக்கியத்தைப் பேணுவதுடன் பாடசாலை,மாணவர் சுத்தத்தையும் கண்காணித்து வருகின்றது

*6. நுண்கலை மன்றம்*

பொறுப்பாசிரியர்கள் : திரு பி.அன்ரனி, திருமதி.ந.நட்பினி

தலைவர் : செல்வன் இ.கபிலேசன்

செயலாளர் : செல்வன் அ.டிசாந்

பொருளாளர் : செல்வன் .மா.காந்தரூபன்

பாடசாலையில் நடைபெறும் சகல கலை நிகழ்வுகளுக்கும் உரிய கலைநிகழ்ச்சிகளை வழங்குவதில் இம் மன்றமானது செயற்பட்டு வருகின்றது

*7. ஆங்கிலமன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதிபி.சரவணபவானந்தன்

தலைவர் : செல்வன் : மா.காந்தரூபன்

செயலாளர் : ரா.நதீஷாடில்ருக்சி

பொருளாளர் : ர.மதுஷா

ஆங்கில தினப்போட்டிக்கு மாணவர்களை தயார்ப்படுத்திக் கொள்வதோடு பாடசாலையில் நடைபெறும் கலை நிகழ்வுகளிலும் பங்கேற்றுக் கொள்கின்றது.

## 8. *விவசாயமன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதிப.சுந்தரலிங்கம்
தலைவர் : செல்வன் : அ.ஆதித்தன்
செயலாளர் : செல்வன் அ.சங்கீத்
பொருளாளர் : செல்வன் அ.டிசாந்

இம் மன்றம் பாடசாலைச் சூழலை அழகு செய்வதுடன் பயன்தரு மரங்கள் நட்டு பராமரித்து வருகின்றது.

## 9. *மனைப்பொருளியல் மன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதிம.தயாநிதி
தலைவர் : செல்விர.மதுஷா
செயலாளர் : செல்விப.பகீர்த்தனாரா
பொருளாளர் : செல்விநா.சுகன்யா

இங்கு நடைபெறும் அனைத்து வைபவங்களிலும் முன் மாதிரியாக செயற்படுகின்றனர்.

## 10. *ஆரம்பக்கல்விமன்றம்*

பொறுப்பாசிரியர் : திருமதிகு.தர்மகுலராணி
தலைவர் : செல்விரா.அபியாபிரியதர்சினி
செயலாளர் : செல்வி க.வைஷ்ணவி
பொருளாளர் : செல்விசி.சிரோமி

ஆரம்பக் கல்வி மன்றமானது தரம் 1 - 5 வரையான மாணவர்களின் பல்வேறு வகையான ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

**விசேடகல்வி அலகு**

பொறுப்பாசிரியர்கள் : திருமதிம.சிவபாலசுந்தரம்
திருமதிந.நட்பினி

விசேட கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்ட கோட்ட, வலய, மகாண, மட்டப்போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**வங்கிச்சேவை**

பொறுப்பாசிரியர் : திருமதிவ.பாலச்சந்திரன்

மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவிப்பதோடு வங்கிகளினால் நடாத்தப்படும் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

| | | |
|---|---|---|
| **J/Kokuvil East Namagal Vidyalayam** | | |
| ***PRINCIPAL TEACHERS DETAILS 2012*** | | |
| 1 | Mr .T.Sivanathan | SLPS 2.II S.M.Dip |
| 2 | Mr.K.Thavakeesvaran | SLPS 2.II.B.A.(Hons) Dip.in.Ed.Med |
| 3 | Mrs.L.Nagaiah | SLTS I Trd.Hindusium |
| 4 | Mrs.V.Nagulanathan | SLTS 2 I Trd.science |
| 5 | Mrs.I.uruthiran | SLTS 2 I B.A Dip in.Ed |
| 6 | Mrs.P.Mariyagunaseeli | SLTS I B.A Dip in.Ed |
| 7 | Mrs.P.Saravanabavananthan | SLTS 3 I Trd.English |
| 8 | Mrs.N.Nadpini | SLTS 3 I Music Dip |
| 9 | Mrs.M.Thayanithi | SLTS 2 II Trd.Home science |

| | | |
|---|---|---|
| 10 | Mrs.S.Mangalakumari | SLTS 2 I Trd.Primary |
| 11 | Mrs.K.Tharmakularani | SLTS 2 I I Trd.Primary |
| 12 | Mrs.S.Rajeswary | SLTS 2 I I Trd.Primary |
| 13 | Mrs.V.Balachandran | SLTS 2 I I Trd.Primary |
| 14 | Mrs.P.Sivakumaran | SLTS 2 I I Trd.Primary,B.A |
| 15 | Miss.S.Sivaruby | SLTS 3 I Science Dip |
| 16 | Miss.R.Jeyarani | SLTS 2.11 Bsc.Dip.in.Edu |
| 17 | Mr.F.Antony | SLTS 2 I Trd.Rc |
| 18 | Mrs.M.Muralikaran | SLTS 2.II M.A B.A.(Hons) Dip.in.Ed |
| 19 | Mrs.J.Mithila | SLTS 3.I B.A |
| 20 | Mrs.K.Sutharshan | SLTS 3.I F.A |
| 21 | Mrs.S.Pakeerathan | SLTS 3.I B.A |
| 22 | Mrs. K.Kalavidya | Asst |
| 23 | Mrs. P.Sabanathan | SLTS 2.1 Train Sci |
| | | |
| | | |
| **Note:-** | Mrs.L.Nagaiah - Retired on 12.11.11 | |
| | Mr.K.Thavakeeswaran(Principal) - Transfer to Kondavil Hindu maha Vidyalayam on 10.09.12 | |
| | Mr.T.Sivanathan- Joined as Principal on 10.09.12 | |
| | Mrs. P.Sabanathan Retired 30.04.2012<br>Mrs K.Kalavidya18.05.2012 She has gone to the Training college | |

# பரிசில் பெறுவோர் விபரம்

*தரம் 1 (2012) அனைத்து மாணவர்களும்*

1. வி.சஞ்ஜீவன்
2. ச.நிசாளன்
3. ந.பிரசாந்
4. செ.பார்த்தீபா
5. ஜெ.இலக்கியா
6. சு.பதுசன்

| | | | |
|---|---|---|---|
| *தரம் 1* | ம.கவிஷாந்த் | : | சமயம், தமிழ், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம் |
| | அ.டெனிசன் | : | றோமன் கத்தோலிக்கம் |
| *தரம் 2* | ஆ.தனுசாயினி | : | சுற்றாடல், கணிதம, சமயம் |
| | பு.சாருகா | : | தமிழ், ஆங்கிலம் |
| *தரம் 3* | ஜெ.பிரும்சிகா | : | சமயம், தமிழ், சுற்றாடல், கணிதம் |
| | வி.சிமியோன் | : | றோமன் கத்தோலிக்கம் |
| | சு.சந்தியா | : | ஆங்கிலம் |
| *தரம் 4* | சி.நிகிதா | : | சமயம், ஆங்கிலம் |
| | யோ.பாஸ்கரன் | : | தமழ், சுற்றாடல், கணிதம் |
| *தரம் 5* | க.வைஷ்ணவி | : | சமயம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் |
| | சி.சிரோமி | : | றோமன் கத்தோலிக்கம் |
| | ரா.அபியபரியதர்சினி | : | கணிதம் |

## *2011 பொதுத்தகைமை*

*தரம் 1* ம.கவிஷாந்த்

*தரம் 2* பு.சாருகா

*தரம் 3* சு.சந்தியா

*தரம் 4* சி.நிகிதா

*தரம் 5* ரா.அபியாபிரியதர்சினி

*தரம் 6* வி.தாட்சாயினி

*தரம் 7* இ.கோகுலன்

*தரம் 8* யோ.ரவீனா

*தரம் 9* ஆ.ரதுர்ஜன்

*தரம் 10* த.தனுஸ்ரன்

*தரம் 11* ர.மதுஷா

## *தரம் 1 – 2012*

1. 6 மாணவர்களுக்கான பரிசு
2. ம.கவிசாந்த் : சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல்
3. அ.டெனிசன் : R.C
4. ஆ.தனுளசாயினி : கணிதம், சுற்றாடல். சமயம்
5. பு.சருகா : தமிழ்
6. ஜெ.பிரும்சிகா : சமயம், தமிழ், சுற்றாடல், கணிதம்
7. சு.சந்தியா : ஆங்கிலம்
8. வி.சிமியோன் : R.C
9. யோ.பாஸ்கரன் : தமிழ், கணிதம், சுற்றாடல்
10. சி.நிகிதா : சமயம், ஆங்கிலம்
11. க.வைஷ்ணவி : சமயம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்
12. ரா.அபியபிரியதர்சினி : கணிதம்

13. சி.சிரோமி : R.C

14. ர.ஜனனி : தமிழ், கணிதம், சுகாதாரம், விஞ்ஞானம், வரலாறு, புவியல்

15. அ.கவிதாஸ் : R.C, சுகாதாரம், விஞ்ஞானம், செய.தொழில்நுட்பம்

16. வி.தட்சாயினி : தமிழ், கணிதம், குடியுரிமை, சுகாதாரம், ஆங்கிலம், வரலாறு, புவியியல். செய.தொ

17. சி.சலோமி : ஆங்கிலம், வரலாறு, புவியியல்

18. ப.யதுசன் : தமிழ், கணிதம், ஆங்கிலம், சுகாதாரம் விஞ்ஞானம், வரலாறு, புவியியல்

19. இ.கோகுலன் : தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்

20. சி.நிக்சனா : தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்

21. சு.ரஞ்சித் : தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல்

22. க.சுலக்சன் : தமிழ், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்

23. யோ.ரவீனா : தமிழ், சமயம், சுகாதாரம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு

24. ஜெ.நிந்துஜா : சமயம், ஆங்கிலம், வரலாறு, புவியியல்

25. மேரிபெனிஸ்ரா : செயன்முறை

26. ஆ.ரதுர்ஜன் : கணிதம், சமயம், சுகாதாரம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், செய.தொ

27. பா.நர்மிலா : தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, செய.தொ

| | | |
|---|---|---|
| 28. இ.கபிலேசன் | : | சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல் |
| 29. இ.கபில்ராஜ் | : | வரலாறு, புவியியல் |
| 30. பி.ஸ்ரீபன் | : | ஆங்கிலம் |
| 31. த.தனுஸ்ரன் | : | கணிதம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், விஞ்ஞானம் |
| 32. அ.டிபிள்சன் | : | வரலாறு, விவசாயம், R.C |
| 33. ஜெ.தர்சன் | : | விவசாயம் |
| 34. அ.ஆதித்தன் | : | புவியியல் |
| 35. ம.மதுசா | : | சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், மனைப்பொருளியல் |
| 36. ப.பகீர்த்தனா | : | ஆங்கிலம், வரலாறு, புவியியல் |
| 37. மா.காந்தரூபன் | : | வரலாறு, புவியில் |
| 38. ரா.நதீஷாதில்ருக்சி | : | ஆங்கிலம், கிறிஸ்தவம் |

க.பொ.த (சா/த) சித்தியடைந்து (உ/த)கற்பதற்கு தகுதிபெற்றோர்.

| | | | |
|---|---|---|---|
| மா.காந்தரூபன் | A | 6C | S |
| அ.டிசாந் | 3B | C | 2S |
| ப.பகீர்த்தனா | A | 3C | 4S |

## விசேட பரிசில் பெறுவோர்

| | | |
|---|---|---|
| தரம் 11 த.தனுஸ்ரன் | : | கேத்திரகணித செயற்பாட்டு போட்டி வலயமட்டம் 2ம் இடம் |
| விசேடகல்வி | : | ச.நிவர்த்திகா<br>கோட்ட, வலய, மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி 1ம் இடம் |

## சைவநெறிப் போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| தரம் 7 | ர.விதுர்சன் | : | தோரணம் பின்னுதல்<br>கோட்டமட்டம் 2ம் இடம் |
| தரம் 8 | ச.ஜங்கரபதி | : | தோரணம் பின்னுதல்<br>கோட்டமட்டம் 1ம் இடம் |
| தரம் 8 | சு.ரஞ்சித் | : | பேச்சு<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 8 | கு.தனுசன் | : | சகலகலாவல்லிமாலை ஓதுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 7 | ச.நிதுஷா | : | சகலகலாவல்லிமாலை ஓதுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 7 | ச.நிவர்த்திகா | : | மாலை கட்டுதல்<br>கோட்டமட்டம் 2ம் இடம் |
| தரம் 10 | மு.ஜனனி | : | மாலைகட்டுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 6 | வி.தட்சாயினி | : | சகலகலாவல்லிமாலை ஓதுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 5 | க.வைஷ்ணவி | : | சகலகலாவல்லிமாலை ஓதுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |
| தரம் 3 | கு.டிலக்சினி | : | சகலகலாவல்லிமாலை ஓதுதல்<br>கோட்டமட்டம் A சித்தி |

புலமைப்பரிசில் உயர்புள்ளி : சி.நிகிதா

இலவச பாடநூல்களை கவனமாக பேணியவர்கள் விபரம்

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1 | செ.பார்த்தீபா |
| 2 | ம.கவிசாந் |
| 3 | செ.கிழிகாந் |
| 4 | வி.சிமியோன் |
| 5 | சி.நிகிதா |
| 6 | ரா.அபியபிரியதர்சினி |
| 7 | வா.தாட்சாயினி |
| 8 | சி.தர்சிகா |
| 9 | யோ.ரவீனா |
| 10 | இ.கபில்ராஜ் |
| 11 | மு.ஜனனி |

## எமது வித்தியாலயத்தின் தேவைகள்

இப் பாடசாலையின் 20 x 60 அடி அளவுடைய சீர்குலைந்த மண்டபம் நீண்டகாலமாக அகற்றப்படாமல் உள்ளது. இதனால் அலுவலக அறை, கணனி அறை, சங்கீத அறை, செயற்பாட்டு அறை, களஞ்சிய அறை, மனையியல் அறை, என்பன இல்லாமல் உள்ளது. எனவே இப்பாரிய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டடம் ஒன்றை அமைத்தல் எமது பாடசாலையின் மிகப்பெரிய தேவையாக உள்ளது.

## பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவியோர் விபரம்

1. அமரர் புவனேஸ்வரி இரட்ணசிங்கம் நினைவாக ரூ. 15,000
2. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அன்பளிப்பு ரூ. 9,750
3. திருமதிமி.ஜெயகாந்தன் ஆசிரியர் (K.N.V) ரூ. 2,000

# நன்றி நவிலல்

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்த திரு.சில்வேஸ்ரி அலன்ரின் கௌரவபாராளுமன்ற உறுப்பினர் ஈழமக்கள் ஜனநாயக கட்சி அவர்களுக்கும் அவர் சார்ந்த உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.மாணிக்கராசா அவர்களுக்கும் கௌரவவிருந்தினராக கலந்து சிறப்பித்த திரு.நா.இரட்ணசிங்கம் (ஆசிரிய வளநிலைய முகாமையாளர்) அவர்களுக்கும் திரு.திருமதி சுஜீந்திரன் குடும்பத்தினருக்கும் திரு.திருமதி. பாலரஞ்சன் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

இன்றய தினத்துக்கு ரூபா 15,000 பெறுமதியான பரிசில்களை வழங்கிய அமரர் இரட்ணசிங்கம் புவனேஸ்வரி அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கிய திரு. யோ.சந்திரகுமார் அவர்களுக்கும் மனம் கனிந்த நன்றிகள்

மேலும் சகலவழிகளிலும் பரிசளிப்புவிழா சிறப்புற நடைபெறவேண்டும் என்ற நோக்குடன் நிதி உதவி வழங்கிய ஆசிரியர்கள், விழாவைக் கலந்து சிறப்பித்த அயற் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அதிபர்

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

# எமது வித்தியாலயத்திற்கு உதவி வழங்கியோர்

திருமதி ல.நாகையா: (ஓய்வுபெற்றபிரதிஅதிபர்)
நடைபாதை மேடையமைத்தல்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
அ.விநாயகமூர்த்தி (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்)
மேலைநாட்டு வாத்தியக் கருவிகள்.

திரு.திருமதி.சுஜீந்திரன் (ஐக்கிய இராச்சியம்)
மேலைநாட்டு வாத்தியக் குழுவினர் உடை.

நல்லூர் பிரதேச சபை – முற்றத்திற்கு மண் நிரவியமை, சுற்றாடல், சுத்தம்.

திரு.திருமதி.பாலறஞ்சன் - (இலண்டன்)
17.11.2012 பரிசுத்தின பரிசில்கள்.

# பாடசாலைக் கீதம்

வாழ்க என்று வாழ்த்துவோம்
வாழ்த்திச் சிரமம் தாழ்த்துவோம்
வாழும் அன்னை கொக்குவில்
நாமகள் வித்தியாலயம் (வாழ்க)

செந்தமிழும் ஆங்கிலமும்
சேரும் தொழிற் கல்வியும்
விந்தைமிகுநல்லறிவியல்
விளங்கும் விவசாயமும் (வாழ்க)

அந்தமிலா அழகியல்
ஆடலோடு பாடலும்
தந்த வித்தியாலயத்
தாயவளைப் போற்றுவோம் (வாழ்க)

நேர்மை மிக்க நெஞ்சுடன்
நீள் நிலத்தில் வாழ்ந்திட
கூர்மைமிக்கஅறிவினை
கொடுத்து எம்மைக் காப்பவள்(வாழ்க)

உயிரை வளர்க்கும் ஆன்மீகம்
உயர்ந்த நல்லசமரசம்
பயில உதவி அம்மையே
பணிந்திடுவோம் அன்னையே(வாழ்க)

இயற்றியவர் : பண்டிதர் சு.ஆறுமுகம்

இசையமைத்தவர் : திருமதி சி.வை.குகநேசன்
(விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்)